**தலைப்பு 211 – அரசாங்க அச்சக திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆம் ஆண்டு**

---

தலைப்பு 211 – அரசாங்க அச்சக திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2016 யூலை 20 ஆம் திகதி அரசாங்க அச்சகருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக்கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

---

ஒதுக்கீட்டுக் கணக்கு, வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**2. கணக்குகள்**

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

அரசாங்க அச்சக திணைக்களத்திற்காக ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதிஏற்பாடு ரூபா 2,006.85 மில்லியனாக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதி வரையில் ரூபா 1,936.06 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடுகளில் ரூபா 70.79 மில்லியன் அதாவது 3.53 சதவீத நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய நிதிஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|
| | தேறிய நிதிஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| மீண்டெழுபவை | 1,833.83 | 1,789.63 | 44.20 | 2.41 |
| மூலதனம் | 173.02 | 146.43 | 26.59 | 15.37 |
| மொத்தம் | 2,006.85 | 1,936.06 | 70.79 | 3.53 |

**2.2 வருமானக் கணக்கு**

**மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம்**

அரசாங்க அச்சக திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக 20.03.02.05 ஆம் வருமானக் குறியீட்டிற்காக ரூபா 520.00 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் மதிப்பிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 690.33 மில்லியன் கூட்டுமொத்த வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது. அது மதிப்பிடப்பட்ட வருமானம் ரூபா 170.33 மில்லியனால் அதாவது 32.76 சதவீதத்தால் விஞ்சி வருமானம் சேகரிக்கப்பட்டிருந்தது.

**2.3 முற்பணக் கணக்கு**

**2.3.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அரசாங்க அச்சக திணைக்களத்திற்குரிய 21101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் குறைந்த எல்லை** | **உள்ளபடியானது** | **ஆகக் கூடிய எல்லை** | **உள்ளபடியானது** |
| **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** | **ரூபா மில்லியன்** |
| 56.15 | 43.83 | 44.15 | 54.07 | 275.00 | 205.25 |

**2.4 கட்டுநிதிக் கணக்கு**

அரசாங்க அச்சக திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 7002/0000/00/0104/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதி ரூபா 1.09 மில்லியனாக இருந்தது.

**2.5 பொது வைப்புக் கணக்கு**

அரசாங்க அச்சக திணைக்களத்தின் கீழ் வரும் 03 வைப்புக் கணக்குகளில் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 64.16 மில்லியனாக இருந்தது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வைப்புக் கணக்கு இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0035/000 | 17.25 |
| 6000/0000/00/0018/0003/000 | 42.24 |
| 6000/0000/00/0002/0050/000 | 4.67 |
| மொத்தம் | 64.16 |

**2.6 கணக்காய்வு அவதானிப்புகள்**

அரசாங்க அச்சக திணைக்களத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு வருமானக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்கூறப்பட்ட 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களின் கீழ் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**3. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புகள்**

**3.1 பதிவேடுகளும் புத்தகங்களும் பேணப்படாமை**

அரசாங்க அச்சக திணைக்களத்தால் கிழே குறிப்பிடப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (ஆ) | கணனி, உபபாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை |
| (இ) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

**3.2 நிதி ஏற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமை**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீட்டின் பிரகாரம் 211-1-1-1205 என்ற செலவின விடயத்திற்காக மீளாய்வாண்டின் போது நிதி ஏற்பாடு ஒதுக்கப்படாதிருந்த போதிலும், ஆண்டின் இறுதி வரையில் அந்த செலவின விடயங்களுக்காக ரூபா 15.92 மில்லியன் பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்தது.

**3.3 கட்டுநிதிக் கணக்கு**

மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 1.09 மில்லியன் கட்டுநிதி மீதி திணைக்களத்தால் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

**3.4 பொது வைப்புக் கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 6000/0000/00/0015/0093/000 ஆம் இலக்க நானாவித பழைய வைப்புக் கணக்கு மற்றும் 6000/0000/00/0002/0004/000 ஆம் இலக்க கேள்வி வைப்பு பழைய கணக்கு ஆகிய இரண்டிலும் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 165.19 மில்லியன் கூட்டுத்தொகையான மீதிக்குப் பதிலாக மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியாக ரூபா 51.81 மில்லியன் காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் ஆரம்ப மீதி ரூபா 113.77 மில்லியன் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வைப்புக் கணக்கின் மீதி தொடர்பாக திணைக்களப் புத்தகத்தின் பிரகாரமும் திறைசேரி புத்தகங்களின் பிரகாரமும் வேறுபாடுகள் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும், நிதிப்பிரமாணம் 427 இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்து அவ் வேறுபாடுகள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் இணக்கஞ் செய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.5 வருமானக் கணக்கு

அரசாங்க அச்சக திணைக்களத்தின் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தராக வருமானக் குறியீட்டு இலக்கம் 01 இல் வருமான மதிப்பீடு தயாரித்தல், வருமானம் சேகரித்தல், கணக்கீடு செய்தல் மற்றும் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் செயற் செயற்பொறுப்புக்கள் கையளிக்கப்பட்டிருந்தது. அந்த வருமானக் குறிப்பீட்டிற்குரியதாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத வருமானக் கணக்கின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையாக இருந்த வருமானம் ரூபா 861.81 மில்லியனாக இருந்தது. அந்த நிலுவை வருமானத்தில் ரூபா 127.98 மில்லியன் தொகை 1989 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அதில் எந்த வருமானத்தையும் மீளாய்வாண்டின் போது அறவிடுவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) 2003, 2005, 2008, 2009, 2011 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் நிலுவையாக இருந்த வருமானத்தில் மீளாய்வாண்டின் போது ரூபா 7.64 மில்லியன் அதாவது மொத்த நிலுவை வருமானத்தில் 6.8 சதவீத அளவு மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

(இ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தனியார் பிரிவிலிருந்து அறவிட வேண்டிய ரூபா 9.51 மில்லியன் கடன் மீதியை அறவிடுவதற்காக 2008 யூன் 24 ஆந் திகதிய என்சீ/6/71/2/1 ஆம் இலக்க திறைசேரி பிரதி செயளாளரின் கடிதத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக் கூற்று

21101 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 6.13 மில்லியனாக இருந்ததுடன் அந்த நிலுவை மீதி 3 வருடங்கள் முதல் 5 வருடங்களுக்கிடையிலான காலவீச்சிலிருந்து முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்த நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டன.

(ஆ) 5 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் முன்கொண்டுவரப்படுகின்ற ரூபா 426,332 கூட்டுத்தொகையான 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த கடன் மீதியை உரிய பிணையாளரிடமிருந்தோ அல்லது பணிக்கொடையிலிருந்தோ அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 01 வருடம் முதல் 03 வருடங்களுக்கிடையிலான கால வீச்சிலிருந்து கொண்டுவரப்படுகின்ற ரூபா 1.19 மில்லியன் தொகையான ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்**

**3.7.1 வருடாந்த செயலாற்றல் அறிக்கை**

2002 செப்தெம்பர் 12 ஆந் திகதிய 402 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் திணைக்களத்தினால் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் செயலாற்றல் அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அந்த அறிக்கை 2016 யூலை 12 ஆந் திகதி வரையிலும் பாராளமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**3.7.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தை நடாத்துதல்**

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஆகக் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தப்பட வேண்டியிருந்த போதிலும், திணைக்களத்தால் 2015 ஆம் ஆண்டிற்காக ஒரு கூட்டத் தடவை மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

**3.8 சொத்துக்களின் முகாமைத்துவம்**

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

கீழே காண்பிக்கப்பட்டுள்ள சொத்துக்கள் விளைவற்றுக் காணப்படுகின்றமை கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்டது.

| சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்றுக் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|
| | | ரூபா | |
| சுயமாகத் தொழிற்படும் வாயிற் கதவு முறைமை | 02 | 2,951,179 | 01 வருடத்திற்கு மேல் |
| Kord 05 அச்சிடல் இயந்திரம் | 01 | தீர்மானிக்கப்படவில்லை | 16 வருடங்களுக்கு மேல் |
| Postcard rotary இயந்திரம் | 02 | தீர்மானிக்கப்படவில்லை | 01 வருடத்திற்கு மேல் |
| Mo l-one colour இயந்திரம் | 01 | தீர்மானிக்கப்படவில்லை | 06 மாதங்களுக்கு மேல் |

**(ஆ) வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்**

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2015 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு அவ்வறிக்கை 2016 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அரசாங்க அச்சகத் திணைக்களத்தால் அந்த அறிக்கை 2016 மே 23 ஆந் திகதி வரையில் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இறுதியாக வருடாந்த பொருள் மெய்மையாய்வு 2013 ஆம் ஆண்டிற்காகவே நடாத்தப்பட்டிருந்தது.

**3.9 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான இணங்காமைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|---|
| | ------------------------------------------------- | --------------- | ---------------------------- |
| | | ரூபா | |
| (அ) | 1987 இன் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டம் | - | 51 காற்றுச் சீராக்கி இயந்திரங்களை வழங்குவதற்கு கேள்வி சமர்ப்பித்த கேள்விதாரர்கள் ஒப்பந்தப் பதிவாளரினால் பதிவு செய்யப்பட்ட கேள்விதாரர்கள் என உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை | | |
| | V ஆவது அத்தியாயத்தின் 1.1 ஆம் பிரிவு | - | முன்னாள் பிரதி அச்சகரொருவர் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் கடமைகளுக்காக விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்புடைய பிரிவின் பிரகாரம் அந்த விடுவித்தலுக்காக நியமன அதிகாரிக்கு விண்ணப்பித்திருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் விதிக்கோவை | | |
| | நிதிப்பிரமாணம் 770 | - | செயற்படும் நிலையில் காணப்படுகின்ற 45 காற்றுச் சீராக்கி இயந்திரங்களை அகற்றுவதற்கு பதிற்கடமை புரியும் அச்சகரினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், வருடாந்த பொருள் மெய்மைய்வுச் சபையினால் அந்த காற்றுச்சீராக்கி இயந்திரங்களை விற்பனை செய்வதற்கோ அல்லது அழிப்பதற்கோ சிபாரிசு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | அரச நிர்வாகச் சுற்றறிக்கை | | |
| | (i) 2008 யூன் 26 ஆந் திகதிய 13/2008 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | 19,031 | 2015 சனவரி 01 ஆந் திகதி முதல் 2015 சனவரி 20 ஆந் திகதி வரை பதிற்கடமை அச்சகராக செயலாற்றிய பிரதி அச்சகருக்கு மாதாந்த எரிபொருள் படிக்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ வாகனத்திற்காக 162.66 லீற்றர் பெற்றோல் எரிபொருள் கட்டளைப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்டிருந்தது. அதற்காக விஷேட அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) 1999 ஒக்தோபர் 08 ஆந் திகதிய 22/99 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கைகளின் 1 ஆம் பந்தி | 322,458 | பாராளமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சின் உதவி செயலாளர் (தொழிலாளர் தொடர்பு) பதவிக்கு அரசாங்க அச்சகத் திணைக்களத்தின் கணிப்பிடுபவர் மற்றும் பொதியிடுபவராக சேவையாற்றிய உத்தியோகத்தர் ஒருவர் 2015 மே 15 ஆந் திகதி மீண்டும் நியமிக்கப்பட்டிருந்தார். அவரின் பயன்பாட்டிற்காக திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனமொன்று விடுவிக்கப்பட்டு அதற்காக இரண்டு சாரதிகளும் நியமிக்கப்பட்டு சம்பளம், படிகள் மற்றும் மேலதிக நேரப்படிகளும் திணைக்களத்தால் செலுத்தப்பட்டிருந்தது. |

**3.10 செயலாற்றல்**

2015 இன் வருடாந்த பாதீட்டு மதிப்பீடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது 3 வருடங்களுக்குரிய 5 வகையான 795,500 பாடசாலை பாடப் புத்தகங்களை அச்சிடும் செயற்பாடுகள் 3 நாட்கள் முதல் 113 நாட்கள் வரையிலான வீச்சில் தாமதித்து அச்சிடப்பட்டிருந்தது. அவ்வாறு தாமதமாகிய அச்சிடல் செயற்பாடுகளின் விலைப்பட்டியல் பெறுமதி ரூபா 35.16 மில்லியனாக இருந்தது.

(ஆ) 2015 சனவரி மாதம் முதல் மார்ச் வரையிலான காலப்பகுதியின் போது வர்த்தமானிகளை அச்சிட்டு பகிர்ந்தளித்தல் தொடர்பாக மேற்கொண்ட பரிசோதனையின் போது அந்த அச்சிடல் நடவடிக்கைகளும் பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகளும் 5 நாட்கள் முதல் 45 நாட்கள் வரையிலான கால வீச்சில் தாமதித்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.11 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**48 காற்று சீராக்கி இயந்திரங்களின் கொள்வனவு**

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தில் பொருத்தப்பட்டுள்ள ஒரு காற்றுச்சீராக்கி இயந்திரம் தீப்பிடித்து அழிவடைந்ததன் அடிப்படையில், தொழில்நுட்ப மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படாது 45 காற்று சீராக்கி இயந்திரங்களும் பாவனைக்கு பொருத்தமற்றது என தீர்மானிக்கப்பட்டு 48 காற்று சீராக்கி இயந்திரங்கள் ரூபா 7,008,073 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.3.1 (அ) வழிகாட்டியின் பிரகாரம் மேற்கூறப்பட்ட கொள்வனவுகளுக்காக கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1 (அ) வழிகாட்டியின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வேண்டிய போதிலும் இந்த கொள்வனவுகளுக்காக வழங்குனருடன் முறையான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நிதிப்பிரமாணம் 41 (2) இன் பிரகாரம் காற்று சீராக்கி இயந்திரங்களைக் கொள்வனவு செய்யும் போது அமைச்சின் செயலாளரின் முன் அங்கீகாரம் பெறப்பட வேண்டிய போதிலும் அதற்கான அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

**3.12 நட்டமும் இழப்பும்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்கள் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

(அ) மிகையாக அச்சிடப்பட்ட மற்றும் பழுதான பெறுமதி கணிப்பிட முடியாத முத்திரை இருப்பொன்று 2010 ஆம் ஆண்டு முதல் இரகசிய முத்திரைப் பிரிவில் வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2002, 2011, 2012, மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் திணைக்களத்தின் வாகனங்களுக்கு 7 விபத்துக்களினால் ரூபா 0.35 மில்லியன் நட்ட இழப்பு ஏற்பட்டிருந்தது. அந்த நட்ட இழப்பிற்குரிய பொறுப்புவாய்ந்த தரப்பினரிடமிருந்து

அறவிடுவதற்கோ அல்லது புத்தகங்களிலிருந்து பதிவழிப்பதற்கோ மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 24 - 80 GSM அச்சிடல் கடதாசியில் 50 மெற்றிக் தொன் கொள்வனவு செய்யும் போது தொழில்நுட்ப மாதிரியோ அல்லது கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவகத்தின் அறிக்கையோ சமர்ப்பிக்காத சகல கேள்விகளும் நிராகரிக்கப்பட்டிருந்தது. நிறுவகத்திற்குத் தேவையான தொழில்நுட்ப மாதிரியான நீர் உறிஞ்சல் பெறுமதி 22 gm 2 இனை விஞ்சிய நான்காவது ஆகக் குறைந்த விலை சமர்ப்பித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 371,823 நிதிரீதியான நட்டமொன்று திணைக்களத்திற்கு ஏற்பட்டிருந்தது.

**3.13 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

திணைக்களத்திற்குத் தேவையான திணைக்களப் பதிவேடுகளை தயாரிப்பதற்காக 4100 தினப் பதிவேட்டு உறைகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், பாராளமன்றத்திற்குக் கையளிக்கப்பட்ட தினப்பதிவேடுகளின் எண்ணிக்கை 3026 ஆனமையால் மிகையாக கொள்வனவு செய்யப்பட்ட 1074 தினப்பதிவேட்டு உறைகளுக்காக ரூபா 65,890 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**3.14 முகாமைத்துவ நலிவுகள்**

திணைக்களத்தின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இரகசியமாகவும் பாதுகாப்பாகவும் முத்திரை அச்சிடல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், தற்போது முத்திரை அச்சிடப்படும் இயந்திரம் தாபிக்கப்பட்டுள்ள வேலைத் தளத்தில் அனுமதியற்ற நுழைவுகளை தடுப்பதற்கான எவ்வித வேலைத்திட்டங்களும் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. முத்திரை அச்சிடலுக்கான பாதுகாப்பு கடதாசி (Security Papers) களஞ்சியப்படுத்தப்பட்டிருந்த அறைக்கும் பூட்டு போடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 39 ஆம் பிரிவின் பிரகாரம் தொழிற்சாலை வளவில் தீ விபத்தைத் தடுக்கும் சமிக்ஞை முறைமையொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்கவில்லை. தீப்பிடிக்கின்ற சந்தர்ப்பங்களின் போது அதிலிருந்து பாதுகாக்கும் திட்டம் தொடர்பாக போதியளவான பயிற்சியும் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. 2004 யூலை மாதத்தில் திணைக்களத்தில் தீப்பிடித்திருந்ததுடன் 2009 செப்தெம்பர் 11 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான செயற் குழுவினால் அந்த தீயினால் ஏற்பட்ட முழுமையான இழப்புத் தொடர்பான அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டிருந்தது.

**3.15 மனித வள முகாமைத்துவம்**

**(அ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 37 | 18 | 19 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 08 | 02 | 06 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 1,234 | 669 | 565 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 694 | 529 | 165 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ஒப்பந்த அடிப்படை) | - | 08 | - | 08 |
| | மொத்தம் | 1,973 | 1,226 | 755 | 08 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் வெற்றிடம் 755 ஆகக் காணப்பட்டது. திணைக்களத்தில் அந்த வெற்றிடங்களை முறையான பிரகாரம் நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காது, ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 08 உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2.32 மில்லியன் மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) முறையற்ற வகையில் ஏனைய தரப்பினருக்கு விடுவிக்கப்பட்ட மனித வளங்கள்**

திணைக்களத்தால் மீளாய்வாண்டின் போது ஏனைய தரப்பினருக்கு முறையற்ற வகையில் விடுவிக்கப்பட்ட மனித வளங்கள் தொடர்பான விபரமொன்று கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | ஊழியர் வகை | எண்ணிக்கை | ஏனைய தரப்பினர் | விடுவிக்கப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| (i) | நிறைவேற்று நிலை | 01 | பாராளமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சு | குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | - மேற்படி - | பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சுப் பதவிக்காலம் வரை |

(இ) மேற்கூறப்பட்ட ஆ(i) இல் குறிப்பிடப்பட்ட பதிற்கடமை அரசாங்க அச்சகராக சேவையாற்றிய உத்தியோகத்தரொருவர் குறித்த பதவியொன்று குறிப்பிடப்படாமல் 2015 சனவரி 21 ஆந் திகதி முதல் பாராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சிற்கு நியமிக்கப்பட்டிருந்ததுடன் அந்த உத்தியோகத்தருக்காக மீளாய்வாண்டின் போது சம்பளம், தொலைபேசிப் படி, எரிபொருள் படி மற்றும் ஏனைய படிகளாக ரூபா 1.23 மில்லியன் திணைக்களத்தினால் செலவிடப்பட்டிருந்தது.